

V211,4N39
N55
59610

திராவிட வாசல்

சி. இறையுடிமான்

வெளியிடுவோர் :

தளபதி

பதிப்பகம்

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

முதற் பதிப்பு] 1955 [விலை 0—4—0

1960-ம் ஆண்டில்.....

கடும் இருளைக்கிழித்து கதிரவன் கீழ்த்திசையில் கிளம்பியது போல, அடிமை இருள் நீங்கி விடுதலை வெண்ணிலாவாக திராவிடம் வரும் நேரம்!

வெண்புரு நம தாயகம்! —வல்லூறு வடநாடு!! வேடர்களாக முன்னேற்ற வீரர்கள் மாறி, வல்லூரை வீழ்த்தி, வெண்புருவை மீட்டு, மீண்டும் மூவேந்தர் மண்டலத்திற்கு பறக்கவிடும் காலம்!

அணி, தேர், புரவி, ஆட்பெரும் படையுடன், தாயக மணி மண்டபத்தே, தம்பிமார் துந்துபி முழங்க, தாய்மார் மகிழ்வு மலர் தூவ, நாட்டோர் வாழ்த்துப் பாட்டிசைக்க, வேட்டதிர திராவிட அன்னையின் சென்னியிலே மணி முடி அணிவிக்கிறது, ஒரு குள்ள உருவம்— நல்ல தமிழ்க் காவியம்—கண்ணியத்தின் ஓவியம்—கடமையின் எல்லை—கட்டுப்பாட்டின் கொல்லை!

அந்த தளபதியை—தள்ரா உளம் கொண்ட திராவிட குலக் கொழுந்தை, குணாளனை — 'அண்ணாவை' பட்டி வீரன் பட்டி பாண்டியன், கை கொட்டி மகிழ்ச்சி காட்டுகிறான் கல்லறையின் கீழிருந்து! கல்லறையா? அல்ல— அல்ல! நல்ல முல்லை மலர்க்குவியலின் கீழிருந்து!! கொள்கையின் சிங்கங்கள் தாலமுத்து, நடராசன், மஃசீது, பாண்டியன்—கண்களைப் பெரிதாக்கிக் காண்கின்றனர், சமாதியாகவா இருக்கிறது அவர்களுக்கு? நன்னாரி வேர் மணக்கும், நல்லறையாகிறது!

வெண்தாடி வேந்தர் புன்னகை சிந்த, நேரு துரை மகனார் கை குலுக்க, பாகிஃச்தான் பாராட்டுரை வழங்க, அகில உலக நாடுகள் பாசக்கரங்கள் நீட்ட, நேசக்கரத்தை அண்ணா காட்ட ... மீண்டும் மண்ணதிர வேட்டும், விண்ணதிர பண்ணும் முழங்கிற்று!......ஆனால்? !

நல்லதோர் வீணைக் கச்சேரி நடுவில், நாகம் ஒன்று எழுந்து நர்த்தனம் புரிவது போல், இன்ப கீதம் எழும்பிய அந்த மண்டலத்தில், துன்ப நாதம் ஒன்று...ஐயோ 'திரா

விட வாசல்' என்ற அலறல் — பரிதாபத்துக்குரியதாக,— பயங்கர ஒலியோடு பாய்ந்தது! யாரால்?...ஏன்?...

*　　　*　　　*

காவிரி போல் ஆறும், பூவிரிந்த சோலையும், மதுதேடி வந்த வண்டுகள், தேன் உண்டு, அந்த மலரின் மடியிலேயே உறங்குவதும், சந்தனப் பொடிகள் தென்றலிலே பறப்பது போல் செந்நெல் கதிர்கள் காற்றில் தலையசைப்பதும், உயர்ந்த ஏரியும், சிறந்த வீடுகளும், பரந்த வீதிகளும் உள்ள ஊர் "நல்லக்குடி".

இந்த ஊரின் தபால்காரன் மனோகரன்! அறம் பேசும் நாக்கோன்! புறம் கூறுநல்லோன்! அவன் இருதயம் அடிக்கடி "பிளாடிங் பேப்பராக" மாறி, ஏழைகளின் கண்ணீரில் சென்று படும், மீளும்! ஓரிரு ஆண்டுகளாக எரிகின்ற வெயிலில் வியர்வையைச் சொரிந்தபடி பணி புரிபவன், வீதியெல்லாம் திரிபவன்!...ம்...நெறிகெட்டோர் செய்கையன்றோ கடமையில் சரிவது!...ஆனால் தபால் கொடுத்த அவனுக்கு 'தந்தி' கொடுத்தால்?...ஆம்! ஆச்சாரியாரின மகள் அல்லி—முள்ளில் ரோசா — வெள்ளி நிலா-தடாகத்தில் ஓர் தாமரை — தங்கத்தின் வார்ப்படம், விழியை வேலாக்கி—மொழியை வாளாக்கி, மனோகரன் மீது வீசினாள்! அலறியபடி வீழ்ந்தான், உளறியபடி எழுந்தான், குளறிப் பேசியபடி நடந்தான்...குளறிய பேச்சுக்களைக் கூட்டிப்பார்த்தான், புதிதல்ல—பழையதுதான், ஆனால் இவனுக்குப் புதுப்பதிப்பு-அது-காதல்!—

ஆச்சாரியார் அம்பிகை ஆலய அர்ச்சகர். காலை போவார்-மாலை வந்தாலும் வருவார் அல்லது மறுநாளை வரை சீட்டாட்டதிலே கூட இருப்பார்...இங்கே ஆலையின் சங்கு மணி பனிரெண்டென, ஊளைக்கூச்சல் இட்டதும், தாளைத்திறந்து, நல்ல சேலை உடுத்து, வழிச்சாலையிலே விழிகளை அலையவிட்டு நிற்பாள் அல்லி! அதற்காக, பருவமங்கையரைப் பார்ப்பதே பெருமை என்னும் சிறுமை இல்லா தமிழ்நெஞ்சம் உடையவன்தான் மனோகரன். என்றாலும் 'கண்களால்' தந்தி கொடுத்த "அவளை"க்காணவேண்டும் என்று நெஞ்சம் போர் தொடுக்கும்! பண்பு தடுக்கும்!... கடமை அடக்கும்!!........ ஆனால் அல்லி மட்டும் வேண்டுமென்றே தினந் தினமும்

'எனக்கு தபால் இருக்க''? என்று கேட்பாள்!...விடுமுறை, நாளிலும் இந்த விளையாட்டு பேச்சு என்றால்......அவனும் இளைஞன் தானே!

ஒரு நாள் 'தபாலா! இப்போதுதான் எழுதுகிறார்கள்' என்று சொல்லி நடந்தான். அவனை கைதட்டிக் கூப்பிட்டாள் 'கடிதமா! எனக்கா? யார் எழுதுவது? சொல்லு!'' என்று மல்லுக்கழைத்தாள். மலையா? அல்லது சிலையா அவன்? ''நான் தான் எழுதுகிறேன்! போதுமா?'' என்று சொன்னான். கொல்லென்று வந்த சிரிப்பை அவன் கொட்டி முடிப்பதற்குள் ''எழுது, எழுது என் பெயர் அல்லி''என்று கூறி உள்ளே ஓடி விட்டாள்.

வீட்டை நோக்கி ''மாமிச மலை'', ''சதைக் கோபுரம்'' அசைந்து வந்து கொண்டிருந்தது...

அன்றிரவு, மனோகரன் ஒரு மணிவரை ஒரு கடிதம் எழுதினான். கடிதமா அது? நடிகவேள் ''இராதா இராமாயணம்'' போல பல புத்தகங்களிலிருந்து இங்கொன்று, அங்கொன்றுமாயுள்ள மணிகளை — முத்துக்களை எடுத்து அழகிய முத்தாரமே தொடுத்து விட்டான்! கற்கண்டைத் தேனிலே கரைத்து, கருப்பஞ் சாற்றையும் பிழிந்தது போல வரிக்குவரி—இனிமை!......

மறுநாள் போனான்! இருவிழிகளின் வழியாக அல்லியின் இருதயம் அவனை வரவேற்றது! 'தபால் உண்டா' என்றாள். ''தருகிறேன், முதலிலே தண்ணீர் தாருங்க''ளென்றான். தந்தாள்! வாங்கினான்! ''ஐய்யய்ய! என்னம்மா, இதிலே மீன்கள் மேய்கின்றனவே?' எனறான். அல்லி ஆச்சரியக் குறியானாள்! 'மீனா? நம்ம ஆத்திலே ஏது இந்த நீச்சம்!'' என்று எண்ணி ''எங்கே மீன்?'' என்று தண்ணீருக்குள் எட்டினாள். ''ஓகோ! உன் கெண்டை விழிகளின் நிழல் மீனாக நின்றதா?'' என்று சிரித்தான். அவன் கன்னத்தில் அல்லி அறைந்தாள்! அடுத்த கன்னத்தையும் திருப்பினான்! உளளே ஓடி, அவள், கதவைச் சாத்தி விட்டாள்.

அதனாலென்ன?, அன்பூறும் நெஞ்சிற்கா அடைக்கும் தாழ் போட்டாள்? புயல் காற்றில் சிக்கிய தென்னைபோல், கள்குடித்த மனிதன்போல் அலைந்தும், வளைந்தும், உலைந்தும் நடந்தான் மனோகர்!

கணீர் கணீரென் கோவில் மணி அடித்துக் கொண்டிருந்தது, அன்று இரவு முழுதும்! ஏகாதசி!! கடிதத்தில் குறிப்பிட்டபடி, அல்லியும் வேலியோரத்தில் காத்திருந்தாள்! பூத்த மல்லிகைகளை, யாரோ, கை தவறி தார் ரோட்டிலே கொட்டியது போல—வானத்திலே விண் மீன்கள் கண் சிமிட்டியபடி இருந்தன.

மனோகரன் வந்தான்! மலர்க்கரத்தைப் பற்றினான்!! ஊடினாள்! அதில் தோற்றாள்!! கூடினர்...... மேகம் நிலா விளக்கை அணைத்தது! பேச்சில்லை – ஆனால், அன்பின அச்சாரமாக "இச், இச்" என்ற ஒலிகள்! வளையல்களின் சிரிப்பு வந்தபடி இருந்தன...பின்னர் அவைகளும் நின்றன. வீட்டுக் கதவு திறந்தது.

சன்னல் வழியே சிறுகச் சிறுக "டார்ச்" விளக்கைச் செலுத்துவதுபோல் இருட்கணம் நீக்கி; வான் வழி, ஆதவன் தன் ஒளிக் கதிர்களை அனுப்பிக் கொண்டிருந்தான்! எழுந்தான் மனோகரன்.........

வெளுத்த உதடுடன்— சிவந்த கண்களுடன் – சரிந்த கூந்தலுடன் அல்லி படுத்திருந்தாள்!... எடுத்தான்! அணைத்தான்!! எழுப்பினான்!!! விடை கேட்டான்!!! கொடுக்காமல் கொடுத்தாள்! போகாமல் போனான்! பல நாள் இப்படி அவனும் பிரியாவிடை பெற்றான்... அவளும் பிரியா விடை தந்தாள்!

நள்ளிரவில், நடுக்கடலில் வலைஞன் மீன் பிடிக்கிறான். நாம் உடன்சென்று பார்ப்பதில்லை. ஆனால் மீன், கடைக்கு வந்துதான் தீருகிறது! அது போல ஆச்சாரியாருக்குத் தெரியாமல் இன்பநீச்சல் அடித்த மகள், கருவுற்றாள் என்ற நெஞ்சை உருக்கும் செய்தி பட்டருக்கு எட்டாமல் போகவில்லை.

குழந்தை என்றால் அதற்கு 'குறள்' ஆசிரியர் ஏதேதோ பொருள் கூறுகிறார். நான் குழந்தை என்றால், இருட்டறையில் நடந்த "உணர்ச்சி மோதலை" ஊருக்கு விளம்பரப் படுத்தும் ஓர் "பலகை" என்பேன்!

ஊரார், கனபாடிகள், சாஸ்திரிகள், பக்கத்து வீட்டு பாலகுருபட்டர், உட்பட பலரும், ஆச்சாரியாரைப் பார்த்து அடிக்கடி "என்னங்காணும்! ஓய்! என்ன விசேஷம்? உங்க ஆத்துக்கு அடிக்கடி தபால்காரன் வந்துண்டிருக்கான்! பேஷ்! பையன் கொஞ்சம் "பசை" உள்ளவன் தான போலத் தோணறது!

அல்லி அதிர்ஷ்டக்காரி தான் ஓய்!'' என்று பேசியபோதெல்லாம், ஆச்சாரியார் தனக்குள்ளே பெண்ணின் பெருமையை மெச்சிக் கொண்டது உண்டு.

ஒரு நாள், பிரசாதத்தை வீட்டிலே மறந்து வைத்துவிட்டு ஆலயத்துக்கு ஆச்சாரியார் அவசரமாகப் போய் விட்டார்!

வீட்டிற்கு ஓடிவந்தார்! கதவோ மூடியிருந்தது! அதன் அருகே வந்தார்! உள்ளே "போதும், போதும். விடுங்கள்", என்று பெண் குரல் கெஞ்சுவதும் "நின் மதிவதனமும், நீள் விழியும் கண்டு என் மதி மயங்கினேன் மூன்று உலகிலும்... உன்னை நயந்து நான் வேண்டியதோர் முத்தம் தந்தால் குறைந்திடுமோ? என்று அரிதாசராக மாறி மனோகரன் பாடுவதும்... அத்தனையும் கதவின் இடுக்கின் வழியாக கவனித்தபடிதான் ஆச்சாரியார் இருந்தார்.

கிள்ளலும், துள்ளலும், இழுத்தலும், அணைத்தலும் ஓடலும், பாடலுமாக இருப்பதே தவிர 'இன்பத்தின் எல்லைக்கு' அவன் இழுத்தாலும், இணங்காத பெண்ணின், 'குணத்தைக்' கண்டு பூரிப்படைந்தார்! புளகாங்கிதம் பெற்றார்!!... அவனும் வீட்டிற்குப் புறப்பட்டான்! ஆச்சாரியார் அதற்கு முன்னே கோவிலுக்குப் போய்விட்டார்...

ஆனால் அல்லி இப்படி —ஏமாந்து அவனுக்கு அடிமையாகி — பிடியில் சிக்கி முன்னமே மடியிலே கருதாங்கி விட்டாள் என்ற திடீர் விபத்தை அவர் எதிர் பார்க்கவில்லை!

புலியையும், புள்ளிமானையும் ஒன்றாகப் பழக்கிக்காட்டி பணம் சேர்க்கவில்லையா சர்க்கஸ்காரன்? அதுபோல மனோகரனை அல்லி, ஆக்கிவிட்டாள் என்று ஆச்சாரியார் ஆனந்தப்பட்டார்! ஆனல் நடந்ததோ பல்உடைபடா இந்தப்புலி, புள்ளிமான் அல்லியின் பருவத்துடிப்பைப் புசிக்கத்தான் செய்தது!

"ஏண்டி! நோக்கு இது நன்னா இருக்கா?'' என்று வாந்தியும் குமட்டலுமாக வீழ்ந்து கிடந்த அல்லியைக் கேட்டார்! 'ஐயோ! பரமேசுவரா!! பார்வதி!!! நான் என்ன பண்ணுவேன்? சொக்கநாதா! பக்தனை சோதிச்சிட்டியே?'' என்று ஆச்சாரியார் தவித்தார்! அல்லி தவழ்ந்தாள்! தந்தையின் நல்லடியில் வீழ்ந்தாள்! மெல்ல முகம்நிமிர்த்தி "அப்பா! அப்பா!! அனல் கக்கும் கண்களுடன் ஏனப்பா கனல் மொழி பேசுகிறீர்கள்? என்னப்பா நடந்துவிட்டது? நான் ஒன்றும் நரம்புகளுக்கு

அடிமையல்ல, இதயம் ஓடும்பக்கம் ஓடுபவளல்ல உணர்ச்சிவ சப்பட்டவளல்ல,உண்மை தெரியாதவளுமல்ல! அப்பா! என் இளமை ஓர் இன்ப மலர்தான்! அது உலர்ந்து போய்விடும் என்பதற்காக மலரை நான் மந்திக்குச் சூட்டவில்லை; மதயா னையின் காலிலே போடவில்லை. மணாளனுக்கு, நல்ல குணாள னுக்கு—ஆம்...“பாண்டிய நாட்டுக் கடல் முத்துப் பல்லழகி! சோழ நாட்டுச் சோறு போல் சொற்சுவையழகி!! சேர நாட் டுத் தந்தம் போல் மேனியழகி!!” என்றெல்லாம் கவிதை பாடிஎன் கண்களைக் கட்டி விடவில்லை, மனோகர்.

வாழ்வதென்றால் நாமிருவரும் தான் வாழவேண்டும். சாவதென்றால் அப்படித்தான் சாக வேண்டும்! என்று இன் றல்ல—மூன்று ஆண்டுகள் பன்னிப் பன்னிச்சொன்ன அன் பாளனை—நல்ல பண்பாளனைத்தான் நம்பினேன் அப்பா! “அப்பா!! நீங்கள் மட்டும் சம்மதித்தால், நாளையே சக்கர வர்த்தி திருமகள் திருமணம் போல் எனக்கு விவாகம் நடக் கும்! சம்மதந்தானா? சரிதானா? சொல்லுங்கள் அப்பா! சொல்லுங்கள்! என்றாள்.

எதை ஆச்சாரியார் சொல்வது? வெண்ணிலவு உல கின் மீது சுண்ணும்பு அடித்துக் கொண்டிருந்தான். திண்ணையில் துண்டை விரித்துப் படுத்தார் ஆச்சாரி யார்......முன்பெல்லாம் உண்டது செரிக்க சந்தனம் பூசிக் கொண்டு, இளந்துளிர் வெற்றிலையில் கலர் சுண்ணும்பு பூசி-மென்று மென்று சுவைப்பார். இன்று? குளித்தே மூன்று நாட்கள் ஆகிவிட்டன! மாடும், ஆடும் கூட மூன்று நாளென்ன மூன்று ஆண்டுகள்கூட குளிக்கா விட்டால் நாற் றம் அவைகள் மீது இல்லை! ஆனால் மனிதன் அப்படியா? பாவம்! முடைநாற்றம் புடை சூழ, சகித்துகிக்கொண்டு சாய்ந்தார்.

“மனோகரனை அழகனென்றால்—அன்பாளன் என்றாள்-நல்ல அருளாளன், பொருளாளன் என்றாள்” அல்லி. ஊரா ரும் அல்லி மனோகரனைப்பற்றி ஆச்சாரியர் காதில் பட சாடை மாடையாய் தூற்றினர்! இவை தெரிந்தும் ஆச்சாரி யார் அவனை-மனோகரனை தன் வீட்டிற்குள் அனுமதித்தார்.

காதலித்தான்—கைவிடமாட்டான், கனத்த அன்புடை யவன், கலியாணம் நிச்சயம் செய்துகொள்வான்! அவனுக் கும் இதில் நம்பிக்கையுண்டு. ஆனால் அவன் என்ன ஜாதி?

'பிரம்மன் முகத்திலே பிறந்தவன் பிராமணன், தோளிலே க்ஷத்திரியன், தொடையிலே வைசியன், காலிலே சூத்திரன் பிறந்தவன்' என்று மனு கூறுகிறதே! அதற்கு மறுப்பும், வெறுப்பும், பக்திப் பொறுப்பு வாய்ந்தவரே செய்வதென்றால், ஊரு என்ன கூறும்? ஏன் இந்தப் புதுப் பேரும் அவருக்கு, "ஐயோ! ஐயோ!" என்று அல்லி—உள்ளே அலறுவது. அவரின் சிந்தனையை அழித்தது. ஆத்திரமுடன் உள்ளே ஓடி, "துடித்து என்னடி பயன்? நாயே எங்கியாச்சும் விழுந்து சாகு! நோக்கு தலைவிதி அப்படி இருந்தா நான் என்ன பண்ணுவேன்?" என்று கூறி மீண்டும் படுத்தார். கண்கள் இமைக்குள் ஓய்ந்தது.

கை பிடித்தவன்—கலியாணம் செய்துகொள்ள துடித்தான்! காதலியோ, தகப்பனுக்கும், கொடுமை சமூகத்திற்கும் பணிந்தாள்!

தன் தகப்பனை 'மீறி' தனி வாழ்வு நடத்த முடியாது என்ற கோழை நெஞ்சம்—தன்னால், மனோகரனுக்கு 'எதிர்காலத் தொல்லையா' என்று குழம்பிய மனம்—முடிவில்?...

அறமொழி பேசி—குறள்வழி நிற்கும் மறவன் மனோகரனுக்காக, பிறர் வாழ்வதற்காக—தொல்லையின் இரும்புக் கரங்களில் சிக்காதிருப்பதற்காக, 'தான் கெட்டுப் போதல்—பட்டுப் போதல் தான் தியாகம்' என்று அந்த மொட்டவிழா முல்லை—கட்டவிழா தாழை—இட்ட அடி எடுத்து வைக்கா புதுமான்—வீட்டுத் தோட்டத்தில், குட்டிச் சுவர் ஓரத்தில் மண் எண்ணெய்ப் புட்டியைத் திறந்து, உடலிலே கொட்டிக் கொண்டது! தீ பட்டது! அந்தோ! சந்தண மரத்திலே செந்தீ பட்டதுபோல—வெந்துச் சாம்பலானாள்! காதல் மணல் மூட்டையை—வைதீக அனல் காட்டைத் தாண்டித் தூக்கிச் சென்றிடாமல், செத்தாள்.

சேவல் கூவிற்று! திண்ணையில் தூங்கியிருந்த வைத்திய நாதனார் எழுந்து கதவைத் தட்டினார், கை ஓய மட்டும் தட்டினார். கத்தினார், கூவினார்!...ஓய்ந்தார். தோட்ட வழியே வீட்டிற்குள் நுழைந்தார், வழியிலே!......

தீயால் வெந்து வெளி வந்த அல்லியின் விழிகள், உலகை விரைத்துப் பார்த்தபடி இருந்தன! கருகிச் சரிந்த அதரங்கள்—அவரைப் பார்த்து குறுநகை புரிவது போலிருந்தது. தொப்பென்று சாய்ந்தார்—மகளைத் தூக்கினார்,

அழகு ஆடிய அந்த ஓவியம் — 'காதல் தூங்கும்' கலைந்த காவியமாகி விட்டது!... பல்லைக் கடித்தார்! தலையைத் தூக்கினார். அவரின் கண்களின் முன்னே மனோகரன் ஓர் 'சுழலும் ராட்டினம் போல' வந்து உருண்டு கொண்டிருந்தான். 'மனோகரா!' என்று ஓர் பயங்கரக் குரல்—அராஜக அலறல் எழுப்பினார்! எழுந்தார்! பிணம் கீழே விழுந்தது... 'பழிக்குப் பழி' என்று அவரின் இருதயம் பட படத்தது.

* * *

'நாம் எந்தப் பொருளை நினைந்து, அதையே அடைய விரும்புகிறோமோ, அந்தப் பொருள் நம் கைக்கு எட்டாமல் தூர விலகி விலகிச் செல்லும்' என்று கவி செல்லி சொல்லிய அனுபவ நல்லுரை மனோகரனின் வாழ்விலே முதன்மை பெற்று விட்டது.

ஒரு வாரம் அலுவலக ஓய்வு எடுத்தான், தேடினான். ஆனால் மூடிய கதவோ மூடியபடியே இருந்தது. 'அல்லி'—அவளை அவன் காணவே முடியவில்லை!—காரணம் புரிய ஓர் வழியும் தெரியவில்லை—ஒரு நாள் நடு இரவு! தொட்டிலில் குழந்தை அமைதியாக தூங்குவது போல்—இருள் தாலாட்ட—ஊர் அமைதியில் உறங்கிக் கொண்டிருந்தது. என்னை மறந்தாளா? காதலைத் துறந்தாளா? தகப்பனின் சொல்லுக்குப் பணிந்தாளோ? வேறொருவனை மணக்க துணிந்தாளோ...பெண்கள்—பண்மென்ற பகலவனைக் கண்டதும் புன்னகை காட்டிபூத்திடும் அவனோடு கைகோர்த்திடும் பங்கஜ மலர்தானா? 'பட்டிருந்த தேகசுகம் விட்டிருக்க முடியாது' என்று திட்ட வட்டமாக கூறிய தீந்தமிழ்க் கவிராசன் பாரதிதாசனார் தீர்ப்பில் ஓர் மாற்றமா?...இப்படி எண்ணியவாறு தலையைத் தூக்கினான். எதிரே திண்ணையிலே வைத்தியநாதர் இருந்தார். சிந்தனை, சோகம் அவர் முகத்திலே கோடைகால வயல் போல' வெடிப்புக் கோடுகளை வரைந்திருந்தது.

'மனோகரா எங்கேடா, இந்நேரத்திலே? உட்காருடா தம்பி' என்றார்.

''எங்குமில்லை, என்னுடன் வேலை செய்யும் நண்பரின் குழந்தைக்கு உடல் நலமில்லை. சென்று காணவே போகிறேன். பச்சைக் குழந்தை—பிள்ளைக் கனிஅமுது—மோவா அரும்பு—கூவா குயில்—என்பேன்! சிறு கை சுவைத்து, குறுநகை காட்டி, நமக்கு இன்பத்தைத் தருவதே அன்றி,

வேறு ஒன்றும் அறியா அந்தச் சிறு மழலைக்கு, பெருங் காய்ச்சல் என்ற போது, என் மனம் 'வாடிய பயிரெல்லாம் கண்டபோது வாடினேன்' என்று பாடிய இராமலிங்க அடிகளின் அன்புள்ளத்தில் ஆழ்ந்தது" என்று கூறி அமைதியாக அவர் அருகே அமர்ந்தான். அதற்குள் ஆயிரமாயிர முறை அவன் கண்கள் வீட்டின் சன்னலிலும், கதவிலும் சென்று மீண்டது. 'வீடு என்ன பூட்டியிருக்கிறீர்கள்? எங்கேயாவது வெளியூர் பயணமா? ஏன் வீடு இருண்டே கிடக்கிறது? விளக்கு வைக்க ..

'அவள் இல்லை! என் அல்லியில்லை! மனோகரா! அவள் இறந்துட்டாட்டா' என்று கூறி, மேல் துண்டை எடுத்து வாயில் மூடிக்கொண்டார். மனோகரின் கண் முன்னே மாடி வீடுகள் தெரியவில்லை—மரங்கள் இல்லை—என் மாநிலமே மறைந்துபோய்—அவன் மட்டும் குதுப்மினார் மசூதிபோல் தனியாக நிற்பதாக உணர்ந்தான். கண்ணாடி மீது—விளக்கெண்ணை ஊற்றப்பட்டு, அதன் மீது தன் கால்கள் நடைபோடுவதுபோல் நடுங்கினான்.

இமயமலையின் சிகரத்திலே எப்படியோ தூக்கியிடப்பட்டவன் போல—திடீர் என்று அவன் உடல் சில்லிட்டது. வானத்தைப் பார்த்தான். மெழுகு வத்திகள் போல—விண்மீன்கள் மங்கி எரிந்து கொண்டிருந்தன.

சங்கத் தமிழ் பேசி, தங்கக் கன்னம் தந்து, இன்பத்தில் தூங்க வைத்த மங்கையர் திலகம்—மாசில்லா முழுமதி இனி மீண்டும் வர முடியாதவளா என்று எண்ணிய அவனின் மனம் - கண்களின் வழியே கண்ணீர்த் துளிகளை அனுப்பி கொண்டிருந்தது. ஏன்?

'எப்படி இறந்தாள், உங்கள் அல்லி?' என்றான்.

'நாலு நாளைக்குமுன்னே சோலையூரிலே அவாபாட்டிக்கு 'காலரா'ன்னு தந்தி வந்தது. அனுப்பினேன். அல்லியே பாட்டி பிழைச்சுண்டா. பகவான்—பதிலுக்கு அல்லியையே பிடுங்கிண்டாரு!' என்று தேம்பினார். திண்ணையிலே சாய்ந்தார். வேதனையின் எல்லையிலிருந்து விடை பெற்றுக் கொண்டு, நடை பழகினான் மனோகரன்.

மாலைநேரம்—கடலோரம்! வானத்துக் காதலனை—வையகத்தில் வாழும் கடற்கன்னி வேண்டுமென்றே எட்டி எட்டி முத்தமிட்டாள்! விழுந்தாள்! மீண்டும் அலையாக

எழுந்தாள்!...இந்தக் காட்சியினை இமை கொட்டாது தூரத்தே—கரை ஓரத்தே இருந்து பார்த்துக்கொண்டிருந்த மனோகரன்—திரும்பினான். ஆம்! அன்றொரு நாள் அவன் நிற்கும் அங்கேதான்—அந்தக் கட்டுமரத்தின் கீழே — தன் ஆருயிர்க் காதலி அல்லி—சிறு பிள்ளையாக... தன் சந்தனக் கைகளால், 'மணல் வீடு' கட்டி மகிழ்ந்தாள்! வீணை ஒடிந்து போனாலும், சில வேளையில் அது எழுப்பிய கானம் காதிலே ஒலிப்பதுபோல— என்றோ ஓர் நாள் அல்லி அமர்ந்த அந்த மணல் மேடு—அவன் நெஞ்சிலே ஊடுருவிப் பாய்ந்தது. வந்தான்! அந்த இடத்தில் விழுந்தான்! மண்ணை வாரி உடலிலே போட்டுக்கொண்டான்! 'கன்னலே! அன்புத் தோகை விரித்துக்காட்டி ஆனந்த மூட்டிய வண்ண மயிலே! நீ நடை போட்டு, என் நெஞ்சில் இன்பக் கடை திறந்த இடம் இதுதானே! அது இதுதானே?' என்றுகூவி கண்ணீரை மண்ணில் கொட்டினான்—ஓய்ந்தான். அல்லியின் நெற்றிக்கு அவன் உவமை சொன்ன அந்த மூன்றும் பிறை அன்றும் வானத்தில் மாட்டின் கொம்புபோல் மீண்டும் முளைத்திருந்தது.

அந்தக் குட்டி நிலா—வெள்ளிக் கட்டித் துண்டு—இன்று வெட்டறிவாளாக—அவன் கண் முன்னே ஆடியது. அன்று இன்பத் தாலாட்டிய விண்மீன்கள்—இன்று, அவன் மீது பொழியவரும் கோடி கண்ணாடி மழைத் துளிகளாக மின்னின! எதையும் அவனால் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை—அழுகை பீறிட்டு வந்தது. தலையைக் கவிழ்த்தான் நெஞ்சலைகளை அவிழ்த்தான்! அவனின் 'காதல் தூங்கிவிட்டது' போல், அவனும் தூங்கி விட்டான்.

காலரா! கொடிய நோய்! அதுவும் பாட்டி கிழவிக்கு! இவள் ஏன் அங்கே போக வேண்டும்? என்று அவனின் தமிழ் நெஞ்சம் எண்ணவில்லை. ஆனால்?...அழும் குழந்தைக்காக பழத்தை நறுக்கப்போய்—தன் கையையே அறுத்துக் கொள்வதென்றால்? உதவி செய்யப்போன அல்லியின் உயிரே போனால்?

மனைவி போனபின்—ஒரு மனிதனுக்கு துணை செய்யக் கூடியது ஒன்று உண்டு, அவை அழியா இலக்கியங்கள்! அறநெறி அழகுக் காவியங்கள் — சத்தான புத்தகங்கள்'

என்று நான் சொல்லவில்லை. வில்லியம் வோர்ட்ச்வொர்த் என்ற ஆங்கிலக் கவி கூறுகிறான்.

'அல்லி' வானத்தில் என்றோ மின்னிப் போன பொன் மின்னல் போல் அவன் கண்ணிலிருந்து மறைந்தபின் — கவலை தோய்ந்த மனோகரன், குறள் படிக்க ஆரம்பித்தான்... இருண்ட சத்திரத்தில் விளக்கு ஏற்றியது போல்—அவன் உள்ளம் கொஞ்சம் தெளிய ஆரம்பித்தது. 'மரணம்' என்ற ஒரு மகத்தான நண்பன்—மாநிலத்தில் இல்லா விட்டால்? அவனால் இந்த அமைதிகூட அடைய முடியாது. அந்த பனை தானும் ஒருநாள் ஆரத் தழுவி-அவனோடு ஐக்கியமாகி விடுவோம் என்ற அசையா நம்பிக்கை தான் அவன் அலை யும் நெஞ்சத்திலே ஓர் அமைதியை உண்டாக்கியது. ஆனாலும்? அந்தச் 'செந்தாமரையை'— 'பாவையை'—'கள்ளோ, காவியமோ? என்று அவன் தமிழ் நெஞ்சச் சுவற்றில் 'கரித்துண்டால்' காதலைக் கிறுக்கிய' 'அல்லி'யை அவனால் மறக்க முடியவில்லை. 'அரசியல் அலைகள்' எப்படி வரலாற்றுக் கடலில் ஓய்ந்ததில்லையோ, அப்படித்தான் அவன் மனமும் அடிக்கடி பழைய நிலைகளைப் புரட்டிப் பார்க்கும்!...

* * *

உப்பரிகையிலே உல்லாசமாக உலாவி வந்த பணக்காரன், ஒரு நாள் திடீரென்று ஓட்டைக் குடிசைக்குள் வாழ ஓடிவிட்டால் அவன் வைக்கும் ஒப்பாரிபோல், கிழக்கிலே வந்து ஆட்சி செய்த கதிரவன், மேற்கே போனதும் முகம் சிவந்து; அழ ஆரம்பித்து, வேறொரு ராஜா—'நிலா ரோஜா' பூப்பது கண்டு ஓடியே போய் விட்டான். புது ராஜாவைக் கண்டு பூவுலகம் பூரித்தபடி இருந்தது. வெட்கமுள்ள சிறு பிள்ளையை தொட்டிழுத்ததும் எட்டிஎட்டிச் சிரித்துஓடுவது போல, நெற்கதிர்களை மனோகரன் தன்கையால் தீண்டுவதற்குள் 'அவைகள்' தலையசைப்பதும் வளைந்து விடுவதுமாக இருந்தன. வழக்கப்படி வயலைச் சுற்றிவந்த மனோகரன் வழியில் வைத்தியநாதரைக் கண்டான். வணங்கினான். 'எங்கேடா தம்பி? தனியாக?' என்றார். 'இதோ இந்தக் கிணற்றிலே குளிக்க!' என்றான். 'இப்போதா குளிப்பது?' என்றார்.

'இல்லை. ஒரு நாளைக்கு இருவேளை குளிர் நீரில்குளித்தல், வாழும் - உயிர்க்கு நன்று. ஆயுள் வளர வழி இதுவும்

ஒன்று என்று நான் செய்வதுண்டு' எனச் சொல்லி 'வரட்டுங்களா?' என்று நகர்ந்தான்.

'என்னடா அது கையிலே சொம்பு? எதுக்கு?" என்றார் வைத்தியநாதர்.

'அதுவா? எனக்கு நீஞ்சத் தெரியாது. படிக்கல்லில் இருந்தபடியே தண்ணீரை மொண்டு குளிக்க!' என்றான்.

கன்னிவைத்த வேடன் தன் வலையிலே மான் வந்து விழத் தயாராகிவிட்ட நிலையில் துடிப்பதுபோல் ஆச்சாரியார் மனம் அடித்துக்கொண்டது. படமெடுத்து நிற்கும் விரிநாகம்—விஷத்தைத் தூக்கி வந்துவிட்ட கருந்தேள்—வெடிக்கக் காத்திருந்த எரிமலை பூகம்பத்தால் குலுக்கப்பட்ட நிலை—இதற்கும் அப்போது மனோகரனை சந்தித்த வைத்தியநாதருக்கும் அதிக வித்தியாசமில்லை!......

"ஏய்! ஏய்!" என்ற ஒரு குரல். மரமாக நின்றிருந்த வைத்தியநாதரின் மனதை இழுத்தது! பண்ணை வேலன் பயிரிலே இறங்கி பசி தீர்த்துக் கொண்டிருந்த பசுக்களை விரட்டிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும்...பாலைவனத்திலே பயணம் செய்து கொண்டிருந்தவனுக்குப் படுத்துத் தூங்க ஓர் புல்தரை கண்ணுக்குப் பட்டது போல் ஆனந்தம் கொண்டார்...ஓடினார். மாமிச உடலைத் தூக்கிக் கொண்டு மிக வேகமாக ஓடினார். 'டேய் வேலா!' என்றார். 'நமஸ்காரம் சாமியோய்!' என்று இரு கைகட்டி நின்றான், ஆச்சாரியார் பேச்சுக்கு, கிருபாநந்தவாரியார் மூச்சடக்கி நிற்பது போல! 'பார்த்தியோடா, வேலா! அந்தப் பய செய்யற அக்ரமத்தே!'

'யாரு சாமி? என்ன விஷயங்க?'

'யாரா? நேக்கு என்ன செய்யறதுண்ணே புரியலே. உன் அக்கா பிள்ளை இருக்கானே அவன் தாண்டா மனோகரன். நீகூட உன் மக 'மகேசுவரியே' தரமுடியாதுண்ணு முன்னே தகராறு பண்ணியேடா'...

'ஆமா! தபால்காரன்! அவனுக்கென்ன சாமி!'

'அவனுக்கென்ன! ஊருக்கு அக்ரமம், உங் குடும்பத்துக்கு ஆபத்து!'

'ஆபத்தா!'

'நான் என்னண்ணு சொல்லட்டும்மடா! வயலோரமா இப்ப வந்துண்டுருந்தேன். மனோகரன் எதிரே வந்தான். எங்கடா போறேன்னேன். வேலனே 'பழிக்குப் பழி' தீர்க்கப் போறேண்ணு. புரியுதா? இப்ப ஊரிலேதான் ஜலம் வரண்டு, உங்க ஆத்திலேயும் அதோ அந்த கிணத்தில்தானே ஜலம் எடுக்கிறே?'

'ஆமாஞ்சாமி!' என்றான் வேலன் திகைப்புடன்.

'ஆமாம்! உன்னைப் பழிவாங்க இப்ப கிணற்றுக்குப் போயிருக்கான்!'

'பழி! கிணறு! என்ன சாமி!' என்று விழித்தான்.

அவன் காதருகே சென்று, 'மனோகரன் கிணற்று ஜலத்திலே ஏதோ விஷ மருந்து கலக்கப் போயிருக்கான்! சொம்பிலே கொண்டு போயிருக்கான்! ஏன்னு புரிறதா? நாளை நீயும் உங் குடும்பமும் செத்துதுண்ணு வைச்சுக்கோ. ஊருண்ணு என்ன சொல்லும்டா! மனோகரனடா, விலங்கு மாட்டிக்குவான்? ஏதோ கிணத்து ஜலத்திலே விஷம் இருந்ததுன்னுதானே ஊரு, போலீசு சொல்லும்! உனக்குப் புரியுதோ? போய், பாரு!...போ!' என்றார். படிப்பில்லா வேலன்...பகுத்தறிய புத்தியில்லா அந்தப் பரிதாபத்திற் குறியவன், பாழ் கிணற்றை நோக்கிப் போனான். அவனின் வெட்டறிவாள் போன்ற அடர்ந்த மீசை துடித்தது. படிகளில் இறங்கினான், பூனை எலியை நோக்கிப் போவது போல! குளித்துவிட்டு சொம்பினைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்த மனோகரனின் முதுகில், வேலனின் கால் அழுந்தியது— 'தொபீர்' என்ற சப்தம்—பனைமரங்களின் சல சலப்பைப் போட்டியிட்டு வெற்றிப் புன்னகை ஒன்றை வாரியிறைத்து விட்டு வைத்தியநாத உருவம் மீண்டும் நடந்தது!... 'அதன் வேலை' முடிந்தது!... இருபது ரூபாய் வருமான முள்ள சிறு குமாஸ்தா, பெருங் குடும்பத்திற்கிடையே சிக்கி, வறுமை வலையில் திணறுவது போல, அந்தக் கிணற்றில் நீந்தத் தெரியா மனோகரன் அமிழ்ந்தான்.

ஆகாயம் இருண்டிருந்தது — மேகங்கள் உருண்டு கொண்டிருந்தன. இனி, நீலவானத்தில் நிலா வந்தால் என்ன? கோலமிட பெண் இட்ட புள்ளி போல் நக்ஷத்திரம் அழகைக் கொட்டினால் என்ன? எரிந்தால் என்ன?

வையமே சரிந்தால் என்ன? அவன் வாழ்வின் 'காதல் ஜோதி' அணைந்து விட்டது. மனிதனுகியும், மழலைமொழி பேசித் திரிந்த மனோகர், புனிதக் காதல் அலைகள் நெஞ்சி புரண்டு கொண்டிருந்த அந்தபுடம் போட்ட இலட்சியவாதி படி ஒன்றுஒடிந்து பாழ்கிணற்றில்வீழ்ந்ததுபோல் - அவன் வாழ்வும் முடிந்து விட்டது. வஞ்சக உலகத்தை இனி பார்க்கக் கூடாது என்றே என்னவோ அவன் பிண மும், கிணற்றில் நீருக்குள் முகத்தைப் புதைத்துக் கொண் டது. காலம், வானில் இருளை தூவிட ஆரம்பித்தது.

*　　　*　　　*

"அடக்குமுறை அகழிகளை நீந்தி, மதவாதிகளின் எதிர்ப்பு மலைகளைத் தாண்டி, 'தடைகள்' எனும் காடெல் லாம் படைகள் நடத்தி, வெற்றி நடை போடும் வீரர்களே! வீரப்புண் ஏந்தியும், வெண்தாடி பெற்றபோதும் 'விடுதலைக் கொடி' ஏற்றிய பின்னும், 'வேலை முடிந்தது' என, ஓய்வு வேண்டாது 'அடுத்து என்ன' என்று சிந்திக்கும் அறிஞா! கடமையே உருவெடுத்து நடைபோடும் தாயகத்துக்காவலா! அண்ணு! உனக்குத்தான்... அம்புகளை ஏந்திக்கொண்டு தெம்புடன் நிற்கும் சம்பத்தே! திருவிடத்தின் பொருளாதார அமைச்சனே...உனக்கும்தான். இலக்கியத்தின் காடே! நாடே மணக்க நற்றமிழ் வளர்க்கப் புகும் நாவலா! நெடுஞ் செழியா! உனக்கும்தான்...மீட்சி பெற்ற தாயகத்தை ஆட்சி செய அமர்ந்துள்ள செயல் வீரர்களே! நான் செத்தேன்? எதனுல்? ஏன்? சிறிது எண்ணுங்கள். காதல் செய்வது மனிதனின் உடைமை நமது மூதாதையரின் கடமை! அதைக் கடைபிடித்தேன். ஆனுல், கடமை என் கழுத்திலே கனத்த மாலையாக விழவில்லை. கூர்வேலாகப் பாய்ந்தது?

யாரால்? எப்படி? வஞ்சகரால், நெஞ்சிலே கொள்கை என இல்லாதவரால். பாராட்டுக் கூட்டத்திலே நிறுத்தப்பட வேண்டியவன், பாழ் கிணற்றில் தள்ளப்பட்டேன்! உள்ளத் தால் நான் தீண்டிய அல்லியை, என் ஆசைக் கிள்ளையை, கருவுற்ற பின் கைவிடவில்லை — காதகனுகி விடவில்லை! 'இதயம் ஒன்று பட்டோம். மெய்யுறுகத் தழுவினேம்!

இனி என்ன உண்டு நமக்கு? சமூகம் விரும்பினால் ஒருமித்தே வாழ்வோம்—இல்லையானால் பெருமையிடன் இருவருமே சாவோம்!' என்றுதான் சொன்னேன்! என்றாலும், என் கன்னல் தமிழை—இன்பக் கரும்பை—காலை இளம் பனித் துளியை-சோலைவனக்குயிலை நசுக்கினர், பொசுக்கினர்! யார்? மனிதனா? இல்லை. சூதர்கள் நிதம் நிதம் வளர்க்கும் மதம்! மதம் என்பேன். எனவே, பூந்தோட்டம் அமைத்து விட்டு புற்றுவைக்கும் அரவங்களும், படமெடுத்து ஆட விட்டால், என்ன பலன்? வீட்டுக்கு வீடு, கதவு என்பீரே, முன் கூட்டத் தில், அதை நினைவு படுத்துகிறேன். ஆம்; அதுதான் திராவிட வாசல்! அடிமைத் தளை நீங்கிய என் அன்னை மண்டலத்தைச் சுற்றியோர் அரண்! மதிற்சுவர் அமையுங் கள். முன்பொருநாள் நாகாக்க மறந்து, சுடுசொல் வீசி, சேரனோடு மோதி, முடிவில் வீரமிழந்த கனக விசயர்கள் கழு தைகளாகி, தமிழகத்துக்குக் கல்தூக்கி வந்த காட்சியை அந்த வாசலின் முன்னே அமையுங்கள்! பூட்டியபடி கதவு இருக்கும், 'பிரான்சா! பெல்ஜியமா!' இரஷ்யாக்காரனா? இங்கிலாந்து நண்பனா? வடநாட்டுத் தோழனா! எவர் வேண்டு மெனில் வரட்டும்-நாட்டை சுற்றிப் பார்க்கட்டும். வந்தபடி, பேரம் போது திராவிட வாயிற்படியில் மடியை உதறிக் காட்டிவிட்டு செல்லட்டும்! இந்தக்கட்டுப்பாடு நாட்டுக்கு மிகத் தேவை என்பது என் நெஞ்சிலே பட்டது. சொன் னேன்! குற்றம் மெனின் மன்னிக்கவும்.

எத்தனையோ தியாகத்திற்குப்பின் எழுந்த இந்த இன்பம் - பண் டைய தமிழகம் என்றும் நிலைக்க வேண்டும். அதற்கு அந்நியாரின் பண் பும், ஆதிக்கமும் தடுக்கப்பட வேண்டும்! பித்தளை நகைக்குப் பொன் முலாம் பூசுவதும், பின்போவதும், மீண்டும் பூசுவதும் எனக்கு விருப்ப மல்ல, தேவையுமல்ல!—கண்ணான நம் தாயகம்என்றும் பொன் னாகவே மின்னியபடி இருந்தால் போதும்! அதற்கு ஒரே வழி?...அமைக்கவேண்டும் அறியதோர் பெரியதோர், அழகிய தோர் 'திராவிட வாசல்!''

ஆனந்தபார்வதி அச்சகம், 30, இடைப்பாளையம் தெரு, சென்னை-3

இனம், நாடு, மொழி, இவற்றுக்கு உறைவிடம்

சிறந்த பல நூல்கள்

அந்த நூல்களில் ஒரு சில,

கோ. இறைமுடிமணி எழுதிய

● அண்ணா நாடகத்தில் ஆச்சாரியார்	0—4—0
● கொழும்பிலே கோட்சே	0—3—0
● திராவிட வாசல்	0—6—0
● 'தளபதி' சுதர்மன்	1—0—0

புகை படங்கள்

○ அறிஞர் அண்ணா (பத்திரிகை படித்தபடி நிற்கும் காட்சி)	0—8—0
○ கலைஞர் மு. கருணாநிதி	0—8—0
○ மீ. சு. இளமுருகுபொற்செல்வி ○ N. V. நடராசன் (திராவிடன் ஆசிரியர்)	0—8—0

புத்தகங்கள்

○ ஆடும் ஆச்சாரியார்	0—8—0
○ திருக்குறள் போலில்லாத நூல்	

விற்பனையாளர்களுக்கு தனிச் சலுகை உண்டு.

விவரங்கட்கு,

தளபதி

பதிப்பகம்.

நிர்வாகி: கோ. சுப்ரமணியம்

16/B, ஆதியப்பசெட்டி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

ஆனந்தாபார்வதி அச்சகம், 30, இடைப்பாளையம் தெரு, சென்னை-3.